**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 100/2022

பெயர் : புவனேஷ்வரி (DW1) (Cross Continuation)

த/க/பெ. :

தேதி :29.10.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்துக்கு முக்குரும்பூர் முடிகண்டநல்லூர் கிராமங்களில் உள்ளது என்றால் சரிதான். ஆரம்பத்தில் வாதி வழக்கு போடும் போது முக்குரும்பூர் கிராமத்தில் 1 முதல் 27 அயிட்ட சொத்துக்களுக்காக வழக்கு போட்டார் என்றால் சரிதான். அதன் பின்னர் என் மனுவின் பேரில் அயிட்டம் எண்கள் 28 முதல் 62 வரையான சொத்துக்கள் வழக்கில் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். அவை நஞ்சை, புஞ்சை சொத்துக்கள் அந்த சொத்துக்களை வாதி மற்றும் 4ம் பிரதிவாதியான என் சகோதரர்கள் தனிப்பட்ட சொத்துக்களாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவை கூட்டுக்குடும்ப சொத்துக்கள். அந்த சொத்துககளை என் பெற்றோர் வாதி மற்றும் 4ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்ததால் தான் வழக்கில் அவர்களை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அந்த உயில் விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. வழக்கிற்காக தான் உயில் விபரம் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி முக்குரும்பூர் 1 முதல் 27 அயிட்ட சொத்துக்கள் முடிகண்டநல்லூர் கிராமங்களில் 1, 2 அயிட்ட சொத்துக்களில் மட்டுமே பாகம் கிடைக்க கூடியது என்றாலும் முக்குரும்பூர் கிரம அயிட்ட நம்பர் 28 முதல் 62 வரையிலான சொத்துக்கள் தனிப்பட்ட சொத்துக்கள் பாகம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.